

சாவகச்சேரியை பிறப்பிடமாகவும், முதலியார் வீதி,
நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் நீலகண்டர் தெய்வானைப்பிள்ளை
## அவர்களின்
### சிவபதப் பேறு குறித்து
# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய சமர்ப்பணம்

வையமதில் வாழ்வாங்கு
வாழ்ந்து நின்று
வளம் தந்து வழிகாட்டிய
எங்கள் குடும்ப விளக்கு
அமரர் திருமதி நீ. தெய்வானைப்பிள்ளை
அவர்களின்
ஆன்மா சாந்தி பெற வேண்டி
எமது கண்ணீர்த்துளிகளில்
உதிர்ந்த இம் மலரினை
அன்னாரின் பாத மலரில்
சமர்ப்பிக்கின்றோம்.

– குடும்பத்தினர் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



அமரர்

# நீலகண்டர் தெவானைப்பிள்ளை

மண்ணில் 22.08.1929 விண்ணில் 01.05.2008

## திதி நிர்ணய வெண்பா

சீர் நிறை சர்வதாரி சிறப்புயர் சித்திரை மாதம்
பார்நேர் ஏகாதசி பேர் திதியில் - சீரார்
நீ[illegible]கண்டர் தொய்வானைப் பிள்ளை சேர்ந்தார் இறைபாதம்
வையகத்து வாழ்வைத் துறந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

**பஞ்ச தோத்திரம்**

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.

## தேவாரம்

அங்கமும் ஆதியும் நான்முகனும்
அறவனையார்க்கும் அருப்பரிய
மந்திரவேதங்கள் ஓதும் நாவர்
மருகநிலாவிய மயிந்த சொல்லால்
செந்தமிழோர்கள் பரவியேற்கும்
சீர்க செங்காட்டும் குடியதனில்
கங்கமத்தி குகையே கமலும்
கணபதீச்சரம் காமுறவே

## திருவாசகம்

பாரொடு விண்ணாய் பரந்த எம் பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய்ச் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகேன் யார்க்கெடுத்துரைக்கேன்
ஆண்டநீ அருளிலே யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருக என்றருள் புரியாயே.

## திருவிசைப்பா

நையாத மனத்தினை நைவிப்பான் இத்தெருவே
ஐயா நீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பேற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமைமணவாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

## பெரியபுராணம்

நன்மை பெருகுஅருள் நெறியே வந்தடைந்து நல்லூரின்
ஆன்பர் திருத்தொண்டனாய் வணங்கிமகிழ்ந்து எழும்பொழுதில்
உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம் என்றவர்தம்
சென்னிமிசை பாதமலர் சூட்டினான் சிவபெருமான்.

## திருப்புகழ்

தனன தான தத்த தனதான
தனன தான தத்த தனதான

எதிரிலாதபக்தி தனைமேவி
இனிய தாணினைப்பை யிருபோதும்
இதய வாரி திக்கு ளுறவாகி
எனதுளே சிறக்க அருள்வாயே
கதிரகாம வெற்பி லுறைவோனோ
குனக மேரு வொத்த புயவீரா
மதுர வாணியுற்ற கழலோனே
வழுதி கூனி மிர்த்த பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் நீலகண்டர் தெய்வானைப்பிள்ளை அவர்களின் வாழ்க்கை வரலாறு

வளங்கொழிக்கும் பூமியென வையகத்தே மிளிரும்
வான்புகழ் ஈழத் திருநாட்டின் கண்ணே
நிலவளமும் நீர்வளமும் நிறைவுறப் பெற்ற
நல்லுயர் யாழ்ப்பாண மண்ணின் மீதினில்
கலைவளம் பொருள்வளம் காசினி போற்றிடும்
கல்விப் பெருவளம் காப்புயர் ஆலயங்கள்
நிறைவுறப் பெற்ற தென்ம ராட்சியின்
சீருயர் சாவகச்சேரி மண்ணில் வாழ்ந்த
நல்லுயர் நாக முத்துவென் பவர்க்கும்
பதிநிறை பொன்னம் மாவென் பவர்க்கும்
ஆயி ரத்து தொள்ளா யிரத்து
இருபத் தொன்பதா மாண்டு ஆவணி
இனியநல் இருபத்து இரண்டாந் தேதியில்
பேறுயர் மகளாய் மண்ணிலே மல்ர்ந்தார்
தூயநற் தெய்வானைப் பிள்ளை யென்பார்
பிறந்தார் வளர்ந்தார் பேறுகள் பெற்றார்
பாரின் கண்ணே புகழுடன் திகழ்ந்தார்
சீரும் சிறப்பும் பெற்றுமே மண்ணில்
சிறப்புடன் திகழ்ந்த தெய்வானைப் பிள்ளை
உயர்வுறு கல்வி தன்னை உயரிய
உடுவில் மகளீர் கல்லூரி தன்னில்
கற்றே வாழ்வில் களிப்பது அடைந்தார்
நல்லுயர் மகவாய் நானிலம் மீதினில்
நலமுடன் வாழ்ந்த தெய்வானைப் பிள்ளை
பூனகரி மண்ணின் பொன்வெளி மண்ணை
பிறப்பிட மாகக் கொண்டே வாழ்ந்த
வினாசித் தம்பி கயிலாய வல்வி
தம்பதி பெற்ற தவமுயர் மகனாம்
நீல கண்டர் என்பவர் தன்னை
இல்லறத் துணையாய் இனிதுட னேற்றார்
நல்லறம் காத்திடும் இல்லற வாழ்வில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலமுடன் மிளிர்ந்த நல்லுயர் தம்பதிகள்
இணைந்த இல்லற வாழ்வின் பயனாய்
சட்டத் தரணி யாகவே மிளிரும்
குணமுயர் கந்த சாமியென் பவரையும்
காலஞ் சென்ற கொள்வனவு உத்தியோகஸ்தர்
சீருயர் கிருஸ்ண தாசனென் பவரையும்
நல்லுப தபால் அதிபர் ஆகிய
புகழுயர் புவன ராணியென் பவரையும்
சீருயர் ஸ்ரீதரன் என்பவர் தனையும்
விருப்புயர் வசந்த குமாரியென் பவரையம்
பதிநிறை பரமேஸ் வரனென் பவரையும்
நல்லுயர் ஆசான் கருணா நிதியையும்
மக்களாய் பெற்றே மகிழ்வது அடைந்தனர்
கந்த சாமி என்பரை மணந்த
கனிவுயர் அமிர்த வல்லியென பவரும்
கிருஷ்ண தாசனை மணமது புரிந்து
அமர் அன்ன லட்சுமி என்பவரும்
அறிவுயர் தெய்வானைப் பிள்ளை என்பரும்
புவன ராணியை திருமணம் புரிந்த
அஞ்சல் ஊழியர் குமார சாமியும்
ஸ்ரீதரன் தம்மின் மனையா ளாகிய
சீருயர் உருத்ரா தேவியென் பவரும்
வசந்த குமாரியை திருமணம் புரிந்த
நற்தீடீர் மரண விசாரணை அதிகாரி
குணமுயர் குகதாசன் எனுமுய ராளரும்
பரமேஸ் வரனை திருமணம் செய்த
தங்க ரத்தினம் என்பவர் தானும்
கருணா நிதியை திருமணம் செய்த
இரஞ்சினி தேவி என்பவர் தானும்
காலஞ் சென்ற தெய்வானைப் பிள்ளையின்
மதிநிறை நல்மரு மக்களே ஆவர்
கந்த சாமியும் அமிர்த வல்லியும்
பெற்ற பேறுயர் பிள்ளைக ளாகிய
பிருந்தா நிருபா பூர்ணிமா என்போரும்
கிருஷ்ண தாசனும் அன்னலட் சுமியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற கவீந்திரன் ஜமேலா மேனகாவும்
கிருஸ்ண தாசனும் தெய்வானைப் பிள்ளையும்
பெற்ற அன்பர் துஸ்யந்தனும் கீர்த்தனாவும்
புவன ராணியும் குமார சாமியும்
பெற்ற அன்புயர் பிள்ளைக ளாகிய
வாசுகி இளங்கோ திருமகன் தன்னுடன்
வேணுகோ நந்த கோபன் என்போரும்
ஸ்ரீதரன் என்பரும் உருத்திரா தேவியும்
பெற்ற பேறுயர் பிள்ளைக ளாகிய
ஸ்ரீலிங்கம் ரகு ரேவதி சபீதாவும்
கஜிதா பிரபாஸ் கரனென் பவரும்
வசந்த குமாரியும் நற்குக தாசனும்
பெற்ற அன்புயர் மக்களே யாகிய
அரவிந்தன் புவனலோஜினி பகிரதன் தன்னுடன்
அங்கயற் கண்ணி என்பவர் தானும்
பரமேஸ் வரனும் தங்கரத் தினமும்
பெற்ற பேறுயுயர் பிள்ளைக ளாகிய
வினோஜா வினோதா விஜயா தன்னுடன்
விதுசா யதுர்சன் என்பவர் தானும்
கருணா நிதியும் இரஞ்சினி தேவியும்
பெற்ற அன்புயர் மக்களே யாகிய
சாருசன் சாருக்தியா ஆருக்தியா வுடனே
பாருக்தியா சனாருக்தியா ஆகியோர் களும்
காலஞ் சென்ற தெய்வானைப் பிள்ளையின்
பேறுயர் பேர மக்களே ஆவர்
மண்ணக வாழ்வை விட்டுமே மறைந்த
மதிப்புயர் வள்ளி முத்துவென் பவரும்
விருப்புயர் வல்லி புரமென் பவரும்
சுப்பிர மணியம் எனுமுய ராளரும்
இனிய நல்லாளர் இராசம் மாவும்
காலஞ் சென்ற தெய்வானைப் பிள்ளையின்
கூடப் பிறந்த சோதரர் களாவர்
வள்ளி முத்துவை மணமது புரிந்த
சீருயர் செல்லப் பாவென் பவரும்
வல்லி புரத்தை திருமணம் செய்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்துப் பிள்ளை எனுமுய ரானரும்
சுப்பிர மணியம் தன்னை மணந்த
சீருயர் வள்ளிப் பிள்ளையென் பவரும்
இராசம் மாவை திருமணம் பரிந்த
நல்லுயர் நமசி வாயமென் பவரும்
காலஞ் சென்ற தெய்வானை பிள்ளையின்
மதிப்புயர் மைத்துனர் மைத்துனி மார்களே
இத்தனை சுற்றமும் இருந்தும் என்பயன்
இறையவன் விதித்த விதியின் பயனாய்
உத்தம மாது தெய்வானைப் பிள்ளை
உமைபாகன் பாதம் பற்றியே சென்றார்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

## பண்புயர் தெய்வமே!

பாசமும் நேசமும் பாரினிலே எமக்களிந்த
பண்புயர் தெய்வமே பாரைவிட்டு ஏனகன்றீர்
வீசுபுயல் எனவந்த விதியினாலே அம்மாவே
விரைந்து நீரெம்மை விட்டுமேன் சென்றீர்
ஆசையுடன் அம்மா என்றுயாம் அழைத்திட
அவனியில் இனியார் உளரோ அம்மா
பாச மக்கள் படுந்துயர் பார்த்திட
பண்புயர் தெய்வமே பார்தனுக்கு வாரீர்

பிள்ளைகள்

## வாசமலர் வாடியதோ!

மாசில்லா மாமணியே
மங்காத சுடரொளியே
பேசுமு[illegible]ர் தெய்வமே
பேசாது ஏன்சென்றீர்
வாசமலர் வாடியதோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையகஒளி மறைந்ததுவோ
ஆசையுடன் மாமி என்றழைக்கும்
அன்புளரை இழந்தேயாம்
ஆறாத துயரடைந்தோம்
அறிவொளியே ஏன் மறைந்தாய்!

மருமக்கள்

## தேனமுதே ஏன் மறைந்தாய்

பேரமக்கள் எமை யென்றும்
பற்றுடனே தானணைப்பீர்
ஆசையடன் எமை அழைத்து
ஆகாரம் ஊட்டிடுவீர்
தேசமதில் நாமுயர்ந்திட
தூயவரே பாடுபட்டீர்
தேடுகின்றோம் உம்மையாம்
தேனமுதே ஏன் மறைந்தாய்

பேரமக்கள்

## தேற்றம்

அவன் விளிப் பின்றி யெந்த
அணுவுமே அசையா தென்பர்
சிவன் விதிப் படியே மண்ணில்
பிறந்தவர் வாழ்வார் என்பர்
எவ்வெனதை விதைத் துள்ளானோ
அவனனை ஆறுந்தே கொள்வான்
கவலையை விடுமின் எல்லாம்
கடவுளின் செயலே ஆகம்.

கவியாக்கம்
அரியாலையூர் லே.ஜ குமரதாசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரஸ்வதி தோத்திரம்

# சகலகலாவல்வி மாலை



வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
லோசக மேழுமளித்
துண்டா னுறங்க வொளித்தான்பித்
தாகவுண்டாக் கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலா வல்லியே!

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்கும் கரும்பே
சகல கலா வல்லியே!

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலா வல்லியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலாவல்லியே

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந்
நாவு மகமும்வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே

பண்ணும் பரமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும்வெங் காலுமன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டுதொண்டர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
    லமுதந் தெளிக்கும்வண்ணங்
காட்டும்வெள் ளோதிமப் பேடே
    சகல கலாவல்லியே

செல்விற் பனமு மவதான
    முங்கவி சொல்லவல்ல
நல்வித் தையுந்தந் தடிமைகொள்
    வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
    முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
    சகல கலாவல்லியே

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
    ஞானத்தின் றோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
    யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
    டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே
    சகல கலாவல்லியே

மண்கண்ட வெண்குடைக் கீழாக
    மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
    வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
    டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ
    சகல கலாவல்லியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருச்சிற்றம்பலம்



**தேவராய சுவாமிகள்**

அருளிச் செய்த

# கந்தர் சஷ்டி கவசம்

**காப்பு**

**குறள் வெண்பா**

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி.

**நேரிசை வெண்பா**

துதிப்போர்க்கு வல்வினைபோம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் – கதித்தோங்கும்
நிஷ்டையும் கைகூடும் நிமலன் அருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடஞ்செய்யும் மயில்வா கனனார்

கையில்வே லாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலாயுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா வெண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக

வாசவன் மருகா வருக வருக
நேகச் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவ வீரா! நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென

வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க

விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயம் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொலி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்

சண்முகன் றீயும் தனியொளி யொவ்வும்
குண்டெலி யாஞ்சிவ குகன்றினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ் வாயும்

நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ந மாலையும்

முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவாயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்நம் பதித்தநற்சீ ராவும்
இரு தொடை யழகும் இணைமுழந் தாளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செககண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண

ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து

முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ!
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்

உன்றிரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடிகாக்க
என்னுயிர் குயிராம் இறைவன் காக்கா
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க

பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க

முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க

வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்ட திரண்டும் பெருவேல் காக்க

வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியிணை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க

முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா னாடியை முனைவேல் காக்க

எப்பொழு தும்மெனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பக றன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க

ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமத நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியி நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கப் பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைக டின்னும் புகழைக்கடை முனியும்

கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராக கதரும்
அடியனைக்கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்ப்படும் மண்ணரும்

கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரு மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளங்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்

பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய பாவையும் ஒட்டிய செருக்கும்

காசும் பணமும் காவுடன் சோறு
ஓதுமஞ் சனமும் ஒரு வழிப்போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தர்களெனைக் கண்டாற் கலங்கிட

அஞ்சி நடுங்கிட அகன்று புரண்டிட
வாய்விட்ட டலறி மதிகெட் டோடப்
படியினின் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறியக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதிற்றெதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்

பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரிவயப் போத்தொடு நாயும்
எலியுங் கரடியும் இனித்தொடா தோடத்

தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துயரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினி லறங்க
ஒளிப்புஞ் சுழுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்

சூலைக்ஷயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் புருதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்

எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாதோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்

உன்னைத் துதிக்க உன்றிரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகாசலனே சங்கரன் புதல்வா

கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் கால குமாரா
ஆவினன் குடிவாழ் ஆழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கவல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே

காரார் குழலாள் கலைகமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் னாடினேன் பரவச மாக
ஆடினேன் னாடினேன் ஆவிநன் பூதியை

நேச முடன்யான் நெற்றியி லணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட னிரக்ஷி அன்னமுஞ் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்

சித்திபெற்ற றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்

வாழ்க வாழ்க வாரணத் துவசன்
வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவ னீகுரு பொறுப்ப உன்கடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய

பாலன் றேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துட னாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்

சிந்தைகலங் காது தியானிப் பவர்கள்
ஒரு நாண் முப்பத்தாறுருக் கொண்டு
ஓதி யேசெபித் துகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் கருளுவர்

மாற்றல ரெல்லாம்வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டா வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை

வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
வழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி

அறிந்தென துள்ளம் அஷ்டலட சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத்த மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குரபரன் பழநிக் குன்றினிலிருக்கும்

சின்னக் குழந்தை சேவடி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனைத்தடுத் தாட்கொள்ள எந்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேல போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி

திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பாயுதனே இடும்பா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்

சரணம் சரணம் சரண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

கந்த சஷ்டி கவசம் முற்றிற்று

## திருப்புகழ்

கைத்தல நிறைகனி யப்பமா டவல்பெரி
கப்பிய கரிமுக னடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்துயிலுறைபவர்
கற்பக எனவினை கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடும் அரண் மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தளவயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிள் மலர்கொடு பணிவேனே
முத்தமிழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புரம் எரி செய்த அச்சிவனுறைரதம்
அச்சது பொடி செய் அதிதீரா
அத்துய ரது கெட சுப்பிரமணிபடும்
அப்புனம் அதனிடைஇபாமகி
அக்குறை மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எமது குடும்பத் தலைவி அன்புத் தாயும், பாசமிகு மாமி அன்பு சோதரரியும் அன்பு பேத்தியுமான நீலகண்டர் தெய்வானைப்பிள்ளை அவர்கள் இறைபதம் எய்திய செய்தி கேட்டு எம்மை நாடி வந்து வேண்டிய உதவிகளைச் செய்த உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் ,தூர இடங்களில் இருந்து வந்து அன்னாரின் மரணச்சடங்கிலும் இறுதி ஊர்வலத்திலும் கலந்து கொண்டவர்களுக்கும் தொலைபேசி மூலமும், கடித மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் அன்னாரின் அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய நிகழ்வுகளில் கலந்து கொண்டவர்களுக்கும் இம்மலரை ஆக்கியவருக்கும் அச்சிட்ட அச்சகத்தாருக்கும் எமது இதயம் நெகிழ்ந்த நன்றிகள்

முதலியார் வீதி,
நல்லூர் தெற்கு. நல்லூர்
யாழ்ப்பாணம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்.
எதற்காக நீ அழுகிறாய் ?
எதை நீ கொண்டுவந்தாய்
அதை நீ இழப்பதற்கு ?
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு ?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை
மற்றொருவருடையதாகிறது
மற்றொருநாள்,
அது வேறொருவருடையதாகும்.



"இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமாகும்.

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்.**

*Pillaiyar*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org